பேசியது உட்பட அந்த வார்த்தைகளைத்தான் நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசியதை மட்டும் நான் நீக்கவில்லை. நான் பேசியது உட்பட நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதனால் ஒன்றுமில்லை, விடுங்கள். (குறுக்கீடு) தூத்துக்குடி என்று நீங்கள் சொன்னதையெல்லாம் இன்றைக்குப் பதிவு செய்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். அப்படியெல்லாம் நான் எதையும் முழுவதுமாக நீக்கவில்லை. (குறுக்கீடு) அப்படியெல்லாம் செய்ய முடியாது. நீங்கள் உங்கள் கருத்துகளை முழுமையாகச் சொல்வதற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடு) நீதிமன்றம் சொல்லாததை நாம் இந்த மன்றத்திலே பதிவு செய்தால், நாளைக்கு அது தவறாகிப் போய்விடும். 22 ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வர இருக்கிறது. மேற்கொண்டு அதில் என்ன வருகிறது என்று பார்ப்போம். இறுதியாணை வரட்டும். அதற்குப் பின்னர் நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால், அதைப்பற்றி அப்போது பார்க்கலாம். (குறுக்கீடு) விடுங்கள். அதைப்பற்றி பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். உங்களுடைய கோரிக்கையையும் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள், பேசாமல் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) ஒரு வாரம் விடுமுறை என்பதால், இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நிறைய உறுப்பினர்கள் நிறைய கேட்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அனைவரையும் அனுமதிக்கும் முடிவில் நான் இருக்கிறேன். ஆகவே, சற்று பொறுமையாக இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல விரும்புவதை, சொல்லி முடிக்கட்டும். பிறகு நான் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புத் தருகிறேன்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கொளத்தூர் தொகுதி, உயர் மின் அழுத்தக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுதல் மற்றும் போதிய மின் நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கொளத்தூர் தொகுதியில் குடியிருப்புப் பகுதிகளுக்குமேல் செல்கிற உயர் மின் அழுத்தக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவது குறித்தும், போதிய மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு

உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Low Tension (LT), High Tension (HT) என்று சொல்லக்கூடிய தாழ்வழுத்த மற்றும் உயர் மின் அழுத்தக் கம்பிகளில் ஏற்படும் மின் கசிவு மற்றும் மின் கம்பிகள் அறுந்து விழுகிற காரணங்களால் ஏற்படக்கூடிய விபத்துகளால் அதிகமான அளவிற்கு மனித உயிரிழப்புகள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மின்வடக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த அவையிலே 5–8–2016 அன்று நான் எடுத்து வைத்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பருவ மழைக்குள் அந்தப் பணிகள் முடிந்துவிடும் என்று ஒரு நல்ல பதிலைத் தந்தார்கள். ஆனால், அந்தப் பணி முழுமையாக நிறைவு பெறவில்லை. மீண்டும் 23–3–2017 அன்று இதே அவையிலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து கேள்வியைக் கேட்ட நேரத்தில், அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து 2,567 கோடி ரூபாய் பெற்றுவிட்டதாகவும், உடனடியாக பணிகள் தொடங்கப்படும் என்றும் இதே அவையில் அறிவித்தார்கள். ஆனால், அந்தப் பணி இன்னும் முழுமையாக நிறைவடையாமல்தான் இருக்கிறது. இதே அவையில் 19–7–2017 அன்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அப்போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிகள் தொடங்கி இருப்பதாகவும், விரைவில் முடிந்துவிடும் என்றும் அறிவித்தார்கள். ஆனால், இப்போது இருக்கக்கூடிய நிலை என்னவென்று கேட்டால், பணிகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது நான் விசாரித்த வகையிலே, ஒரு புதிய முயற்சியாக trenchless முறையில் இந்தப் பணியை மேற்கொள்ளவிருப்பதாக ஒரு செய்தியை நான் அறிந்தேன். எனவே, இப்போது நான் இந்த அவையிலே தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, வரும் பருவ மழைக்கு முன்பாகவே அப்பணிகளை வேகமாக முடித்து, விலைமதிப்பற்ற மனித உயிர்களையெல்லாம் காப்பாற்றுகிற வகையில், ஒரே சீரான மின்சாரம் கிடைக்கக்கூடிய வழிவகையை

இந்த அரசு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே நான் மீண்டும் எழுப்பக் கூடாது. அதற்கான உறுதியைத் தந்தால் மட்டும் போதாது; அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

அதேபோல், சீரான மின்சாரம், தடையில்லா மின்சாரம் குறித்துப் பேசும்போது 19–7–2017 அன்று நான் இதே அவையில், கொளத்தூர் பகுதி, கணேஷ் நகரில் 230/33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டி, ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டு வந்தேன். அப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்தில் மேற்படி பணி தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். நேர்மை நகரில் 33/11 கிலோ வோல்ட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, 2015 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்திவிட்டோம்; எனவே, விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் அறிவித்தார்கள். 30–5–2018 அன்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பித்த நேரத்தில், கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 87–ல் கணேஷ் நகரில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்றுகூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இரண்டு நாட்களுக்கு முன்பு இதே அவையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் 12–6–2018 அன்று ஓர் அறிக்கையைப் படித்த நேரத்தில், 5,068 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையில் 25 துணை மின் நிலையங்களை அமைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதில், கொளத்தூர் பகுதிக்கு உட்பட்டிருக்கக்கூடிய கணேஷ் நகரும் அடங்கும். கடந்த ஆண்டு தொடங்கப்படக் கூடும் என்று அறிவித்த பணி, இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு விதி 110–ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையிலும் இடம் பெற்றிருக்கிறது. அதில் நேர்மை நகர் பகுதிக்குண்டான 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் குறித்த அறிவிப்பு இடம் பெறவில்லை. இந்த இடத்தை கையகப்படுத்துகின்றபோது பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கவும், கழிவு நீரேற்று நிலையம் அமைக்கவும் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசாணைகூட என் கையில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு

2018 ஜூன் 14] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒப்படைக்க விரும்புகிறேன். ஆகவே, உடனடியாக கணேஷ் நகர், நேர்மை நகர் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணியை வேகமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மற்றும் கழிவு நீரேற்று நிலையம் அமைத்து அந்தப் பகுதி மக்களினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோரிய அந்தக் கொளத்தூர் பகுதியில்தான் இப்போது அதிகமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். 28 கிலோ மீட்டர் தூரத்திற்கு உயர் மின்னழுத்தப் பாதை சென்று கொண்டிருக்கின்றது. அதில், 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதைவடத் தடமாக மாற்றப்பட்டிருக்கின்றது. இடையிலே காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று சொன்னால்,* Water Board–*ஆக இருந்தாலும் சரி,* Corporation–*ஆக இருந்தாலும் சரி, அவற்றிற்குச் சொந்தமான நிலங்களில் தோண்டுவதற்கு இழப்பீட்டுத் தொகை இப்போது அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், முன்மாதிரி நடவடிக்கையாக* trenchless *ஏற்பாட்டைச் செய்யலாம் என்று அதை நிறுத்தி இருக்கிறோம். 2,567 கோடி ரூபாய் மத்திய அரசு நிதியுதவி வழங்கியது. ஆனால், மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலத்தின் விலை மதிப்பு அதிகமான காரணத்தினால், அந்தத் தொகைக்குள் அந்தப் பணியைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இதுபோன்ற செலவுகள் அதிகமாகின்றன; அதைக் குறைப்பதற்கான வழிவகையினை மேற்கொள்ளும் வகையில் இப்போது புது மாதிரியாக, முதன்முதலாக, கொளத்தூர் பகுதியிலேயே* trenchless *முறையில் போடலாம் என்பதற்காக, நடந்துகொண்டிருக்கின்ற பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக முன்மாதிரியாக,*

அதை நாங்கள் செய்திருக்கின்றோம். அந்த புதிய நடைமுறையின் காரணமாக, அதற்கு எப்படியெல்லாம் டெண்டர் கோரப்பட வேண்டும் என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இந்தப் பகுதியில் இதுவரைக்கும் அதுபோன்ற பணிகள் நடைபெறவில்லை. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் சென்று பார்த்து, அதற்குத் தேவையான specifications எல்லாம் தயார் செய்து, நாங்கள் நடைமுறையில் கொண்டு வந்திருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, நாங்கள் சொன்னது உண்மை. இல்லையென்று சொல்லவில்லை. நடைமுறையில் தாமதத்திற்குக் காரணம் இதுதான்.

அதேபோல், நாங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே கணேஷ் நகரில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்துச் சொல்லியிருந்தோம். அப்போது, இடம் குறித்து சிறிய பிரச்சினை இருந்தது. இடப் பிரச்சினை தீர்ந்த பிறகுதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைய முன்தினம், விதி 110—ன்கீழ் கணேஷ் நகரில் துணை மின் நிலையம் அமைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். கணேஷ் நகர் பகுதியிலேயே நேர்மை நகரில் 33/11 கிலோ வோல்ட் திறன்கொண்ட துணை மின் நிலையம் கேட்டிருக்கின்றீர்கள். அந்தப் பகுதியிலேயே கணேஷ் நகரில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி வேலைகள் முடிந்ததற்குப் பின்னர், அந்தப் பணிகள் நடைபெறும். HT மற்றும் LT மின்னழுத்தக் கம்பிகளைப் பொறுத்தவரையில், 698 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அவ்வளவு கிலோ மீட்டர் தூரம் போடுவதற்கு போதிய நிதி வேண்டுமென்பதால், நிதியாதாரத்திற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பெரம்பூர் division—க்கு மட்டும்தான் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இங்கிருக்கின்ற மாநகர சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே புதைவடத் தடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11—45

மின் விபத்து ஏற்படுவது என்பது உண்மைதான். அதற்குக் காரணம், ஏற்கெனவே மின் கம்பிகள் மேலே சென்று கொண்டிருக்கின்றன; கீழே வீட்டைக் கட்டிவிடுகிறார்கள். வீட்டைக் கட்டியதற்குப் பிறகு மாடியில் துணி காயப்போடுதல் உள்ளிட்ட பணிகளைச் செய்கின்றபோது, எதிர்பாராதவிதமாக

2018 ஜூன் 14] [திரு. பி. தங்கமணி]

விபத்து ஏற்பட்டுவிடுகின்றது. வீடு கட்டியதற்குப் பிறகு HT line போட்டிருந்தால், அதை அரசினுடைய தவறு என்று சொல்லலாம். ஏற்கெனவே சென்று கொண்டிருக்கின்ற மின் கம்பிகள் கைகளுக்கு எட்டுகின்ற உயரம் வரை மாடி வீடுகளைக் கட்டி விடுகிறார்கள். அதனால், எதிர்பாராதவிதமாக விபத்து ஏற்படுகின்றது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, அதுபோன்ற விபத்து ஏற்பட்டதையடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நிவாரணம் வழங்கியது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கணேஷ் நகர் பகுதியில் நேர்மை நகர் பகுதிக்குத் தேவையான 33/11 KV துணை மின் நிலையம் உடனடியாக அமைக்கப்படும். தற்போது டெண்டர் கோரப்பட்டுள்ளது. இன்னும் 10 நாட்களில் டெண்டர் திறக்கவிருக்கிறோம். எனவே, 31–3–2019–க்குள் பணிகளை விரைந்து முடிப்பதாக எங்களிடம் அதிகாரிகள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நாங்கள் அதை ஆய்வு செய்து, வேகமாகப் பணிகளை முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

புதைவடக் கம்பிகள் அமைப்பதைப் பொறுத்தவரையில் trenchless முறையில் போடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆரம்ப கட்டப் பணிகள் முடிந்து, வேலையை ஆரம்பித்துவிட்டோமென்றால், வேகமாக வேலைகள் நடைபெற்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மின் விபத்து இல்லாத ஒரு தமிழகத்தை உருவாக்குவதற்கு முன்மாதிரியாக உங்கள் தொகுதி இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், உங்கள் தொகுதியில்தான் அதிகமான HT lines செல்கின்றன. கைகளுக்கு எட்டுகின்ற தூரத்தில் HT lines இருக்கின்ற காரணத்தால் ஏற்படுகின்ற விபத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். அதனால் அந்தப் பணியை முன்னுரிமை அடிப்படையில் எடுத்து வேகமாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.